இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,089, NOVEMBER 24, 1905.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALE.

No. 1,055, E. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிஸில்,
கொழும்பில், 1905 ம் ௵ கார்த்திகை௴ 9 ந் ௳.

1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 22 ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை முற்பகல் கிழக்கு மாகாணத்து கவர்ண்மேந்து ஏசென்றவர்கள் தனது ஆபிஸில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார்.

காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,571. மண்முனைப்பற்று.

உரித்தாளி—முடிக்குரிய.

| காணி இல. | குறிச்சி. | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 92648 | பாலமுனை | வ. ப. கந்தப்பன் | தோட்டம் | 3 2 2 | 12 50 |
| 92649 | ஷை | உதுமாலெவ்வை | ஷை | 7 0 11 | 12 50 |
| 92650 | ஷை | ப. மீராசாய்வு | ஷை | 3 2 30 | 12 50 |
| | | உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92651 | ஷை | ப. மீராசாய்பு | தோட்டம் | 1 1 20 | 12 50 |
| | | உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92652 | ஷை | ப. மீராசாய்வு | தோட்டம் | 0 0 7 | 12 50 |
| | | படம் 3,569. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92639 | மாவடிமுனமாரி | ச. க. குமரப்போடி | வயல் | 6 3 28 | 10 0 |
| | | படம் 3,568. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92636 | வம்மியடிஊத்து | வ. கறுவல்தம்பி | வயல் | 5 0 31 | 10 0 |
| | | உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92637 | ஷை | நா. சின்னத்தம்பி | வயல் | 6 1 30 | 10 0 |
| 92638 | ஷை | ஷை | வயல் | 3 3 3 | 10 0 |
| | | படம் 3,584. கோறளைப்பற்று. | | | |
| | | உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92692 | நாசுவன்தீவு | சி. ப. உம்முணித்தம்பி | தென்னைக்கேற்றகாடு | 25 3 26 | 10 0 |
| 92694 | ஷை | சி. ப. சினனத்தம்பி | ஷை | 2 0 26 | 10 0 |
| 92695 | ஷை | வ. மரியாந்தம்பி | ஷை | 2 1 28 | 10 0 |
| 92696 | ஷை | வீ. சின்னத்தம்பி | ஷை | 4 1 2 | 10 0 |
| 92697 | ஷை | வீ. கண்ணப்பன் | ஷை | 5 0 33 | 10 0 |
| | | படம் 3,573. ஏறாவூர்பற்று. | | | |
| | | உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92663 | கொடுவாமடு | தொ. வ. கறுவல்தம்பி | வேளாண்மைக்கேற்றகாடு | 4 0 26 | 25 0 |
| 92664 | ஷை | க. வேலுப்பிள்ளை | ஷை | 4 0 0 | 25 0 |
| | | படம் 3,579. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92681 | கொம்மாதுறை | சார்ஸ் டி சில்வா | தென்னைக்கேற்றகாடு | 12 2 36 | 10 0 |
| 92683 | ஷை | மெத்தின் டி சில்வா | ஷை | 6 2 34 | 10 0 |
| | | படம் 3,580. கோறளைப்பற்று. | | | |
| | | உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92635 | கல்குடா | ச. தேவசகாயம் | தென்னைக்கேற்றகாடு | 3 0 24 | 10 0 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசென்றுத்துரையவர்களிடம் வினவி யறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களினது கட்டளையின்படி,
ஜி. எம். பௌலர்,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

## LAND ACQUISITION NOTICES.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புப்புரஸ்ஸ றேட்டுக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,499. குறிச்சி—பானவிலதென்னைதெல்பிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| Q 888 | வாறியகொடவத்தை | தேயிலை | சொந்தக்காறன் 56,163 ம் படம் வைத்திருப்பவர் | 2 0 6 |
| R 888 | ஷை | ஷை | ச. ற. ம. ப. ழ. பழனியப்பா செட்டி | 0 0 0·25 |
| S 888 | எஸ்கொறவத்தை | ஷை | வினரனும் பிறஞ்சும் | 0 2 20 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழி௴ 16 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டிகச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 17 ந் உ.

எச். வேஸ்,
அரசாட்சி ஏசன்று.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வாடி வீடு கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 3,120. குறிச்சி—குளியாப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| M 1236 | ஹொறக்காமூலவத்த | தென்னந்தோட்டம் | குணறத்ன பண்டா, பீ. எம். அப்புகாமியும் மற்றவர்களும் | 0 3 8 |
| N 1236 | கலமுல்லவத்த | ஷை | முதியான்சலாகே அப்புசிஞ்ஞோ | 0 0 25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரம்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாசம் 18 ந் தேதியிலன்று 1 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 21 ந் உ.

எஸ். எம். பறோஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாடசாலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 3,104. குறிச்சி—மாஎவிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். அ. று. ப. |
|---|---|---|---|---|
| M 1235 | கப்புவத்தகல | சேனை | எம். கப்பியும் இன்னும் சிலரும் | 0 1 36 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாதம் 18 ந் தேதியிலன்று 1 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 21 ந் உ.

எஸ். எம். பறேஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாடசாலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,077. குறிச்சி—நக்காவத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| R 1234 | மீகாமூலவத்த | தோட்டம் | என். குருசாமியும் மற்றவர்களும் | 0 2 36 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணிஎடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ௵ மார்கழிமாதம் 18 ந் தேதியிலன்று 1 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகை௴ 21 ந் உ.

எஸ். எம். பறேஸ்,
அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பன்னலயிலுள்ள பாடசாலைகளின் பாவிப்புக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,079. குறிச்சி—பன்னல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|
| S 1234 | யகலகொடல்ல | தென்னந்தோட்டம் | செ. ம. சின்னத்தம்பி | 0 1 33 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிசெய்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 18 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துவின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 21 ந் உ.

எஸ். எம். பரோஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICE, WASTE LAND SETTLEMENT.

இதன்பின் சொல்லப்படுங் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1905 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 24 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

---

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கு மேல் கிருவைப்பத்தைச்சேர்ந்த கெபெல்லகெற்றிய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, 20 ஏக்கர் 18 பேர்ச்சு விசாலமுடையதும், சாமானியமாய் தலபெல்லேகேனே, இம்புலேகெற்றியகேனே முதலிய பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 72 ம் பிரதமபடத்தில் 5 ம் துண்டாய்க் குறிக்கப்பட்டதுமான காணித்துண்டு, இதற்கெல்லை : வடக்கு-முடிக்குரிய தலபெல்லேகேனே ; கிழக்கு-முடிக்குரிய தலபெல்லேகேனே, முடிக்குரிய கற்ங்கொஸசேகேனே ; தெற்கு-முடிக்குரிய பொறெல்லேகேனே, முடிக்குரிய கலென்னேகேனே ; மேற்கு-முடிக்குரிய இம்புலேகெற்றிய அத்தற.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டதாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டு இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்ற தென்பதையும், அதின் விசாலமாகும் 2 ஏக்கர் 3 றூட் 6 பேர்ச்சும் முன்சொன்ன 20 ஏக்கர் 18 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 72.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 5a ... | இம்புலேகெற்றியேவத்தை ... ... ... | 2 3 6 |

*இங்கிலீஷின் IV. ம் பாகம் 1443 ம் பக்கத்தின் படத்தைப்பார்க்க.

2,341 Hambantota S. O. 2—1905

---

[Tender for the sale of Opium Licenses, Tangalla and Hambantota.]

1899 ம் ஆண்டின் 5 ம், 1903 ம் ஆண்டின் 14 ம், 1905 ம் ஆண்டின் 9 ம் இலக்கச் சட்டங்களின் பிரகாரம், தங்கல்லை உதவி ஏஜன்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வோர் தலத்தில் 1906 ம் ஆண்டு ஜனவரிமாசம் 1 ந் தேதி தொடுத்து டிசம்பர்மாசம் 31 ந் தேதிவரையில் சில்லறையாய் அபின் விற்றதற்கு தத்துவம் கேட்குகின்ற கேள்விப்பத்திரங்களை தங்கல்லை தாணயத்தில்வைத்து 1905 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 8 ந் தேதி பகல் 12 மணி வரையில் உதவி ஏஜண்டு அவர்களால் பாரமெடுக்கப்படுகின்றதை இதனால் அறிவிக்கின்றன.

2. இன்னும் அம்பாந்தோட்டையிலும் உதவி ஏஜன்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வோர் தலத்தில் 1906 ம் ஆண்டு ஜனவரிமாசம் 1 ந் தேதி தொடுத்து டிசம்பர்மாசம் 31 ந் தேதிவரைக்கும் சில்லறையாய் அபின் விற்றதற்கு தத்துவம்கேட்கும் கேள்விப்பத்திரங்களை அம்பாந்தோட்டைக் கச்சேரியில் வைத்து 1905 ம் ஆண்டு டிசம்பர்மாசம் 5 ந் தேதி பகல் 12 மணி வரையில் உதவி ஏஜன்று அவர்களால் பாரமெடுக்கப்படும்.

கேள்விக்காறன் தானாக அல்லது அவர் ஏற்படுத்திய அவரின் காரியகாறன் குறித்த தலத்திலும் தேதியிலும் ஏஜென்று அவர்களின் முகதாவில் நில்லாதுபோனாலும், அல்லது அவரின் கேள்வியை ஏற்றுக்கொண்ட சமயத்தில் அவரின் கேள்விப்பத்திரத்தில் காணும் முதலால் மூன்றில் ஒரு பங்கைக் கட்டாதுபோனாலும் அவரின் கேள்வியைக் கவனிக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் சுத்தயீனமாக யிருக்குமாகில், உதவி ஏஜன்று அவர்களின் விருப்பப்படி தத்துவங்களை மேற்குறிக்கப்பட்ட கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் மேற்சொல்லிய தேதிகளில் பகல் 1 மணியளவில் பிரசித்த ஏலத்தில் அல்லது வேறுவிதம் விற்கப்படும்.

அதிக தொகையுள்ள கேள்வியை அல்லது யேதுமோர் கேள்வியை அங்கீகரிக்க உதவி ஏஜன்று கட்டுப்பட்டில்லை.

---

அம்பாந்தோட்டை கச்சேரி,
1905 ம் ஆண்டு நவம்பர்மீ 16 ந் உ.

ஜே. ஓ. கே. மேர்ட்டி,
அரசாட்சி உதவி ஏசண்டு.

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொருபங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும் ; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப்பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப்பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும் வரையும் மாசந்

தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல் வேண்டும். முதலாம் தவணைப் பணத்தை ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (பிக்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத் தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்,

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப்பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவு செலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும் காகிதபத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச் செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனைக் காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸ்பட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் மயங்கியிருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புது புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடந்தபெற்றவுடனே அபின் பெற்றதொகையும் செலவான தொகையு மெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பத்திகொலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையை தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொத்தின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர்பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் துணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர்பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுள்ளவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவு பெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிரும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்திகலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டம் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ, நாலு அவுன்ஸ, எட்டு அவுன்ஸ், ஒரு ருத்தல், இரண்டு ருத்தல், நாலு ருத்தல், ஏழு ருத்தல ஆகிய அவாடுபோர்ச் சமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப்புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும் :—

சில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம் :—

| தேதி | | ரூ. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| ஆனி 1.— கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... இலக்கம் 1 மொத்த விலை யாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

### கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

### அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 ருத்தல் |
| 28 ருத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேய்ன் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி ; அதாவது 7 டிறம்களுக்குக் குறைய.

---

[Tender for sale of Opium License, Jaffna.]

1899 ம் ஆண்டின் 5 ம் இலக்க அபின் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமைய இத்தால் நான் விளம்பரம்பண்ணுவதாவது : 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி துவக்கம் ஒரு வருஷத்துக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் எல்லைக்குள் அபின் விற்பதற்கு கொடுக்கப்படும் உத்தரவு ஒன்று.

அவ் உத்தரவுக்கு ஒட்டி முத்திரைவைத்த கேள்விப்பத்திரங்களை கவண்மேந்து ஏசண்டு அவர்கள் அல்லது உதவி ஏசண்டு அவர்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 5 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளுவார்கள்.

கேள்விக்காரர் தங்கள் கடதாசிகளை கொண்டுவந்து சமுகத்திற் கொடுக்கவேண்டும். தபால் மார்க்கமாய் வரும் கேள்விப்பத்திரங்கள் அல்லது சொல்லப்பட்ட நாள் மணித்தியாலத்துக்கு பின்வரும் கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா. கவண்மேந்து ஏசண்டு உயர்ந்த கேள்வியை அல்லது எதொரு கேள்வியை ஏற்க கடமைப்பட்டவரல்ல.

அவ் உத்தரவு 1899 ம் ஆண்டின் 5 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின்படியும் 1903 ம் ஆண்டின் 14 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின்படியும், 1905 ம் ஆண்டு ஆவணிமீ 25 ந் தேதியின் 6,071 ம் இலக்க "கசெற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட 1905 ம் ஆண்டு ஆவணிமாதம் 12 ந் திகதியைக் கொண்ட கட்டுப்பாடுகளுக்கு அமையவும் கொடுக்கப்படும்

எல். எஸ். வூல்வ்,
ஜே. பி. லுவிசுக்காக,
வடமாகாண கவண்மேந்து ஏசண்டு.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 6 ந் உ.

---

[Tender for transporting Salt into Government Stores, Puttalam.]

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவற்ணமேந்தின் குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விரும்புள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவற்ணமேந்து ஏசன்றுத்துரை அவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 28 ந தேதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது:—

புத்தளம், பலாவி, பச்சகட்டி, முந்தல், மேல்கரை, கீழ்கரை உப்பளங்களில் 1905 ம் ஆண்டு பெரும்போகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏறக்குறைய 300,000 அந்தர் உப்பை புத்தளத்திலிருக்கும் உப்பு கலஞ்சியங்களுக்கு ஏற்றுமதிபண்ணி நிறுத்து குவிக்கும் டணிவிடைக்காக.

கேள்விக்காரர்கள் இதன் பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. கேள்விக்காரர்கள் கொம்பிமுனை, தில்லையடி, பச்சகட்டி, முந்தல், பலாவியிலிருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்து குவிக்கவும்; (2) கீழ்கரை, மேல்கரை அலங்களில் இருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கவும் ; (3) மறுபடி மேற்சொல்லிய இரண்டு பகுதியில் அதாவது கொம்பிமுனை, தில்லையடி, பச்சகட்டி, முந்தல், பலாவியையும், கீழ்கரை மேல்கரை அலங்களிலிருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கவும், பிறம்புபிறம்பான கேள்விப் பத்திரங்கள் கேட்கவேண்டியது.

2. சாக்குகளுக்கு வாய்க்கட்டி ஏற்றுமதிபண்ணிக் கொண்டுவந்து குதத்தில் நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கு 1,000 அந்தருக்கு என்ன வீதமென்றும் விபரித்துக் காட்டியிருக்கவேண்டியது.

3. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,500 அந்தர் உப்புக் கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்கவேண்டியது.

4. மேற்கூறிய வேலை 1906 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் தேதி அல்லது அத்தேதி முடிந்தவுடனே துவக்கப்படல் வேண்டும்.

5. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விக்கேட்க முதல் கச்சேரியில் ரூபாய் 50 ஒடுக்கவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திருத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட சடுதிப்புப் பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

6. கொந்திரு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப்பதிலாய்ப் புத்தளத்தில் ஓர் பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

7. இந்தக் கொந்திருத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல் விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதமும் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

8. கேள்வியின் விதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்திலே கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்கவேண்டும்.

9. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்கதிகாரித் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரைக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால்வழியாக அனுபவேண்டும்.

10. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டியது.

11. பிணை உடன்படிக்கை கடுதாசியின் சரிபிலை பார்க்கும் முடியின் தாணிபின் செலவுகள் அனுகூலப்படும் கொந்திருத்துக்காரனால் கொடுக்கப்படவேண்டும்.

எவ். போஸ்,
புத்தளம் கச்சேரி, உதவி அரசாட்சி ஏசன்று.
1905 ம் ஹூ கார்த்திகை மீ 16 ந் உ.

---

[Teuder to ship Timber, Batticaloa.]

மட்டக்களப்புப்பகுதிக் காட்டுக் கந்தோர்.

இதன்பின் காணப்படும் வேலையை 1905 ம் ஆண்டிற் செய்ய விருப்பமானவர்களிடமிருந்து "மரங்களை யேற்றுமதிபண்ணுவதற்குக் கேள்விப்பத்திரம்" எனக் கடிதவுறையி லெழுதப்பட்டு (இரு பிரதிகளான) முத்திரைவைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 1905 ம் ஆண்டு மார்கழிமாதம் 9 ந் தேதியாகிய சனிக்கிழமை பகல் 12 மணி மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அறுகாமத்திலிருந்து (ஏறக்குறைய) 220 சமண்டலை மரங்களையும், 157 விணிலை மரங்களையும் கொழும்புத் துறைமுகத்திலிருக்கும் பாலத்தில் சென்றிறல் டிப்பாவண்டிற் கொந்திருத்துக்காரனிடம் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

மேற்சொல்லிய வேலையைச்செய்ய விருப்பமானவர்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் 50 ரூபா பிணை கட்டிப் பற்றித்துண்டை மட்டக்களப்புப் பகுதிக் காட்டுத்துரை யவர்களிடங் கொடுத்தால் கேள்விப்பத்திர மெழுதப்படவேண்டிய (போறம்) தாளைக் கொடுப்பார். இவ்விதமாகப் பெற்றுக்கொண்ட (போறம்) தாளில் எழுதப்படாத கேள்விப்பத்திரங்களை கவனிக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரத்தை மட்டக்களப்புக் காட்டுத்துரைக்கும், அதின் இணைப்பிரதியைக் கௌரவ ஓடிற்றர் ஜெனறலுக்கும் அனுப்பவேண்டும். கேள்விக்காறன் ஒப்பந்தத்துக்குட்பட அல்லது தேவையான பிணையைக் கொடுக்கத் தவறினால், முற்பணமாகக் கட்டிய தொகை பறிமுதலாக்கப்பட்டு அரசாட்சிக்காய் விடும்.

இறக்குமதிபண்ணும் பாலத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் மரத்தின் கன அடி யொன்றுக்கு வீதமென்னவென்று எழுத்தாலும் இலக்கத்தாலும் போடவேண்டுமென்றும், எவ்வளவு காலத்துக்குள் கொந்திருத்து வேலைசெய்து முடிக்கப்படுமென்றுங் காட்டவேண்டும்.

கேள்விப்பத்திரத்தி லேதாவது மாற்றங்கள் செய்தால் அவ்விடத்தில் கேள்விக்காரனின் விலாசத்தைத விடவேண்டும். மாற்றங்கள் செய்யப்பட்டு விலாச மிடப்படாமலிருக்கு மெல்லாப் பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது.

இக்கொந்திருத்தைச் சரியாய் நடத்துவதற்குப் பிணையாகக் கொந்திருத்திற் கையொப்டமிடமுன், அதின்பேரால் கொந்திருத்துக்காறனுக்குப் போடதியாக வருந் தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதம் முற்பணங் கட்டவேண்டும்.

கேள்விப்பத்திரங்களி லெதனையாவது அல்ல தெல்லாவற்றையுமாவது தள்ளுமுருத்து அரசாட்சியாருக்குண்டு.

சொல்லப்பட்ட நாளில் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதைப்பற்றிய மேலதனமான விளம்பரங்களை மட்டக்களப்புக் காட்டுத்துரையவர்களிடம் வினவி யறிந்துகொள்ளலாம்.

எல்பிறட் கிளார்க்,
மட்டக்களப்பு உதவி கட்டுப்பாதுகாவலர்.

மட்டக்களப்புக் காட்டுக்கந்தோர்,
1905 ம ஆண்டு கார்த்திகைமீ 7 ந் உ.

---

[Tender for Toll Rents, Puttalam District.]

"புத்தளம் டிஸ்திறிக்கின் 1906 ம் ஹூ மார்கழிமாதம் 31 ந் தேதி முடிவாகும் ஆயக்குத்தகைகளை விலக்குவாங்க" வென்று மேல்உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1905 ம் ஹூ கார்த்திகைமாதம் 28 ந் தேதி சாயந்திரம் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படுமென் றித்தால் அறிவிக்கப்படுகின்றது.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

1. கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஆயக்குத்தகைகளை வெவ்வேறாய்க் கேள்விப்பத்திரங்கள் எழுதிக் கேட்கவேண்டும் :—

பாலாவி கற்பிட்டி றோட்டுக் குத்தகை.

1. (a) பாலாவியிலிருந்து கற்பிட்டிக்குப்போகும் பிரசித்தறோட்டு 1 ம் கட்டைக்கிட்டே.
(b) பாலாவியிலிருந்து கற்பிட்டிக்குப்போகும் பிரசித்த றோட்டு 6 ம் 7 ம் கட்டைக்கிடையில்.

ஒருந்துறையில் மாத்திரம் பணம் அறவிடப்படும்.

ஆற்றுக்குத்தகை.

2. பாலாவி.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்க முதல் 1 ம், 2 ம், ஆயக்குத்தகைகள் ஒவ்வொரு ஆயக்குத்தகைக்கும் கச்சேரியில் ரூபாய் 50 வீதம் கட்டவேண்டும். அவ்விதமே காசுகட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விக்காரனுடைய கேள்வியை ஏற்றுக்கொண்டால் விற்பனவிலன்று கொள்விலையின் பத்திலொரு பங்கு ரொக்கம் கட்டத் தவறினாலும், மேலும் தேசாதிபதியவர்கள் அக்கேள்வியை ஏற்றுக்கொண்டால் அச்சம்மதியை அறியக்கொடுத்த முப்பது நாளைக்குள்ளாக சரியான பிணைகொடுக்கத் தவறினாலும் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

3. கொந்திரு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப்பதிலாகப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

4. கேள்வியின் விதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்கவேண்டியது.

5. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால்வழியாக அனுப்பவேண்டும்.

6. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

7. பிணைக்காகக் கட்டும் சீட்டுகளைப் பரிசோதிக்க முடிமந்திராலோசனைச் சங்கத்தின் செலவுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனால் கட்டவேண்டும்.

8. போடப்படும் கேள்விக்கடுதாசிகள் திருத்தியற்றதாயிருந்தால் சொல்லப்பட்ட ரேந்தைகளை கேள்விப்பத்திரங்கள் உடைத்த விடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். எம். பரேஸ்,
அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகைமீ 15 ந் உ.

---

[Sale of right to collect Forest Products, Batticaloa.]

கிழக்கு மாகாணம் மட்டுக்களப்பு டிஸ்திறிக்கின் பலபற்றுகளிலுமுள்ள முடிக்குரிய காடுகளில் சேகரிக்கக்கூடியதாகவிருக்கும் பின்சொல்லப்படும் காட்டுப்புரோசனங்களை 1906 ம் ஆண்டுக்குச் சேகரிக்கும் உரித்துகளை மட்டுக்களப்பு கச்சேரியில் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 27 ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரசித்த ஏலத்தில் கூறிவிற்கப்படும்:—

1. கடுக்காய்
2. காஞ்சுரங்கொட்டை
3. மரப்பாசி
4. கண்டல்பட்டை
5. பொன்னாவரம்பட்டை
6. வேம்பாடம்பட்டை
7. கோடைக்கிழங்கு
8. உலவுக்காய்ந்த குருவிக்கூடு
9. உதிர்ந்தபுள்ளிமான் கொம்பு மரைக்கொம்புகள்

ஒவ்வொரு பற்றிலும் காட்டுப்புரோசனங்கள் சேகரிக்கும் உரித்து பிறிம்பு பிறிம்பாகவேனும் அல்லது மட்டுக்களப்பு டிஸ்திறிக்கு முழுதுக்குமாகவேனும் விற்கப்படும்.

ஒவ்வொரு காட்டுப்புரோசனத்தையுஞ் சேகரிக்கும் உரித்துத் தனித்தனியாகவேனும் விற்கப்படும்.

கேள்வியை ஏற்றுக்கொண்டால் அக்கேள்விக்காரன் 50 ரூபாய்க்கு மேலதிகமான கேள்வியானால், கேட்டதொகையில் நூற்றுக்கு 25 வீதம் காசு உடனேகட்டி மிகுதிப் பணத்தை பத்து நாட்களுக்குள் கட்டவேண்டும். 50 ரூபாய்க்குக் குறைந்த கேள்வியானால் முழுத்தொகையும் உடனே கட்டவேண்டும்.

உயர்ந்த கேள்வியை அல்லது வேறெந்தக்கேள்வியையும் அரசாட்சி ஏசன்று ஏற்றுக்கொள்ளக்கடமைப்பட்டவராயிருக்கமாட்டார்.

இவற்றைப்பற்றிய கொந்தைகளும் வேறுவிளம்பரங்களும் மட்டுக்களப்பு கச்சேரியில் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசென்றுவிடம் கேட்டறிந்துகொள்ளலாம்.

எச். ஈ. பெவன்,
கிழக்கு மாகாண அரசாட்சி ஏசன்றுக்காக.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1905 ம் ௵ கார்த்திகைமீ 15 ந் உ.

---

[Sale of right to collect Ranawara Bark, Hambantota.]

இற்றுலறிவிப்பதாவது கிருவாப்பத்து கிழக்கிலும் கிருவாப்பத்து மேற்கிலும் மாகம்பத்து வேட்டை இஸ்த்தானத்தைத் தவிர மற்றும் தலங்களிலும் 1906 ம் ஆண்டு தைமாதம் முதல்தேதி துவக்கம் மார்கழிமாதம் 31 ந் தேதிவரைக்கும் முடிக்குரிய காணிகளில் றணவருப்பட்டை என்ற அவரம்பட்டை சேர்த்தெடுக்க உரிமை அம்பாந்தொட்டைக் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால்—

(1) ஒவ்வொரு பத்துவை வெவ்வேறுவும்.
(2) எல்லாப்பத்துவைகளு மொருமிக்கவும்.

1905 ம் ஆண்டு டிசெம்பர்மாதம் 8 ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்குத் தங்கல்லை தாணயத்தில் வைத்து விற்கப்படும்.

விற்பனையின் பொருத்தனைகள்.

1. விற்பனை காவி கவற்ணமேந்து ஏசன்றவர்களின் உறுதிக்கதினமானது.

2. வாங்கினவர் வாங்கின முதலில் ¼ பங்கை விற்பனை முடிந்தவுடன் கட்டவும் பாக்கிஉள்ளதை 14 நாட்களுக்குள் கொடுக்கவும்.

3. வாங்கினவர் பாக்கி உள்ளதை 14 நாட்களுக்குள் கொடுக்கத் தவறினால், அவர்கட்டிய பணத்தை அபராதங் கொடுக்கப்பார். இன்னும் பட்டை சேகரிக்கு முரிமையை முன்னறிவித்தல் பண்ணிவிட்டுத் திரும்ப விற்கப்படும்.

4. வாங்கினவருக்குத் தன் உரித்தைச் சாட்ட அல்லது அம்பாந்தொட்டை கவற்ணமேந்து உதவி ஏசன்றுடைய பிரியமின்றித் திரும்ப அதை விற்கக்கூடாது.

5. 1906 ம் ஆண்டு திசெம்பர்மாதம் 31 தேதி அல்லது அதற்கு முன்பாக வாங்கினவரும் அவரதின் கூலி ஆட்களும் வேலைசெய்வதைவிட்டு இன்னும் அவர்கள் சேர்த்திருக்கும் பட்டைகளெல்லாத்துடன் சேர்த்து ஸ்த்தானங்களையும்விட்டு விலகுவார்கள்.

6. 1906 ம் ஆண்டு மார்கழிமாதம் 31 ந் தேதிக்குப் பிறகு மரப்பட்டை யாதொன்று, அல்லது தளவாடங்கள் வாங்கினவர் வசம் அல்லது அவரது கூலிஆட்களிடம் சேர்க்கப்பட்ட ஸ்தானங்களிலிருந்து காணப்படுவதுகளைக் கவற்ணமேந்து உதவி ஏசன்றுடைய கட்டளைப்படி பறிக்கப்பட்டுத் தடங்கல்பண்ணப்படும்.

7. வாங்கினவர் அவரை மரச்செடிகளைத் தேவையற்ற சேதத்தால் காப்பாற்றக்கடமையாகவிருக்கும். இன்னும் அவருடைய கூலியாட்கள் பிறமாக அசட்டையானசெய்கைகளுக்கும் பொறுப்புள்ளவராக விருப்பார்.

8. இரண்டு வருடங்களுக்குக் கீழான வயதுள்ள அல்லது நாலு அடி உயரத்துக்குக் குறைவான அவரை மரம் வெட்டப்படாது.

9. வாங்கினவர் எந்த நேரமும் காட்டுப்பகுதி உத்தியோகத்தர் யாரையாயினும் அல்லது கவர்ணமேந்து உதவி ஏசன்றர் நியமிக்கப்பட்ட உத்தியோகத்த செவரையாயினும் அவர் வேலைசெய்யுந் தலங்களையும் அவர்கள் சேர்த்திய மரப்பட்டையையும் போய்ப்பார்க்கவிடுவது அவர் கடமையாகயிருக்கும்.

10. இப்பொருத்தங்க ளேதொன்றையாவது மீறிநடக்கில் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்கள் வத்தைப் பொருத்தத்தை முடிவாகாத காலத்திலெல்லைக்கு யாதொரு ஈடின்றி வத்தையைத் தீர்மானிக்க வுருத்துண்டும்.

ஜே. ஒ. கே. மேர்ட்டி,
கவற்ணமேந்து உதவி ஏசன்று.

அம்பாந்தொட்டைக் கச்சேரி,
1905 ம் ௵ நொவம்பர்மீ 16 ந் உ.

---

GEORGE J. A. SKEEN, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.